# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# *2005 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க வெடி மருந்துகள் (திருத்தச்) சட்டம்*

---

*(2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, யூன் மாதம் 17 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2005 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க வெடி மருந்துகள் (திருத்தச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 34/2000

### வெடி மருந்துகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, வெடி மருந்துகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

183 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

**2**. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும், வெடி மருந்துகள் சட்டத்தின் 2 ஆம், 3ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

"வெடி மருந்துகள் கட்டுப்பாட்டாளர், பிரதிக் கட்டுப்பாட்டாளர்கள், உதவிக் கட்டுப்பாட்டாளர்கள்.

2 (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அமைச்சுச் செயலாளரே வெடிமருந்துகள் கட்டுப்பாட்டாளராதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அமைச்சின் மேலதிகச் செயலாளர் மற்றும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒவ்வொருவரும் வெடி மருந்துகள் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஒருவராதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அமைச்சு உதவிச் செயலாளர் ஒவ்வொருவரும் வெடிமருந்துகள் உதவிக்கட்டுப்பாட்டாளர் ஒருவராதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வெடி மருந்துகளின் பிரதிக் கட்டுப்பாட்டாளர்களாக அல்லது வெடிமருந்துகளின் உதவிக் கட்டுப்பாட்டாளர்களாக இருப்பதற்கென அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கென அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்கள் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து நியமிக்கப்படலாம்.

பரிசோதகர்களும் வேறு பணியாட்டொகுதியும்.

3. (1) சாசன் பதவி வரிசைக்குக் குறையாத பொலிசு அலுவலர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வெடி மருந்துகள் பரிசோதகர் ஒருவராதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான வேறு அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.".

2 –PL 000195– 1,250 (2005/03)

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டணைக்கு அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகை யிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப் படுகின்றது :—

*"சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத் தாவதினின்று விலக்களிக்கப் படுதல்.*

30. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், ஆயுதந் தாங்கிய படைகளினால், பொலிசுப்படையால் அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தால் அத்துடன் வெடிமருந்துகள் கட்டுப்பாட்டாளருக் கென அல்லது அவர் சார்பில் வைத்திருக்கப்படும் வெடிமருந்துகளுக்கு ஏற்புடைத்தாதலாகாது.

(2) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும், வெடிமருந்துகளை ஏற்றுதல், இறக்கு தல், கொண்டுசெல்லுதல் அத்துடன் களஞ்சியப் படுத்துதல் தொடர்பான ஏற்பாட்டை ஆக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்ற வாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொ ருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.".

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்